**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.13/2024 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.2 |
| Name : | **திரு. சத்யராஜ்** |
| Father's Name/Husband Name: | **திரு. அண்ணாதுரை** |
| Village : | மருவத்தூர் |
| Taluk : | **ஆலத்தூர்** |
| Age : | 39/ 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 23.10.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி ஆஜர் )**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 பிரியா எனது மனைவி. எதிரி முத்துசாமியைத் தெரியும். அ.சா.2 பாலமுருகன் எனது மைத்துனர். வழக்கு சம்பவத்திற்கு முன்பாக எங்களுக்கும் எதிரிக்கும் இடையே முன்விரோதம் இருந்து வந்தது. எதிரி சம்பவத்திற்கு முன்பாக எங்களது வீட்டின் வெளியே தண்ணீர் தொட்டி பகுதியில் என் மனைவி, என் தாயார் மற்றும் என் 7 வயது குழந்தை ஆகியோர் குளிப்பதை வீடியோ எடுத்து எனக்கு ஆகாதவர்களிடம் காட்டி அது எனக்கு தெரியவந்தது. அதன் பிறகு பிரச்சனையானது. எதிரி என் மீதும் என் மனைவியின் மீதும் வழக்கு தொடர்ந்தார். கடந்த 09.08.2022 அன்று நான் வேலைக்கு சென்றுவிட்டேன். அன்றைய தினம் மதியம் சுமார் 2.30 மணியளவில் எனது மனைவி, என் மைத்துனர் மற்றும் என் 7 வயது குழந்தை வீட்டில் இருந்தபோது, எதிரி பின்பகுதி வழியாக கதவை திறந்து வைத்துக் கொண்டு உன் வீட்டுக்காரரை வரச் சொல் தேவிடியா, கண்டாரஓலி உன் புருசனை ஜெயிலுக்கு

அனுப்பிட்டேன் உன்னால ஒன்னும் பண்ண முடியாது என்று கூறியதற்கு என் மனைவி ஏற்கனவே வழக்கு நடந்துக் கொண்டிருப்பதால் எதுவும் பேசாதீர்கள் என்று சொன்னதற்கு எதிரி என் மனைவியை தேவிடியா நான் எதுவேண்டுமானாலும் பேசுவேன் உன்னால் எதுவும் செய்யமுடியாது என்று சொல்லி ஓடிவந்து என் மனைவியின் முடியைப் பிடித்து இழுத்து முதுகில் குத்திவிட்டதாகவும், என் மனைவி வலி பொறுக்கமுடியாமல் கத்தியாதகவும், அக்கம்பக்கத்தில் உள்ளவர்களும் எனது மைத்துனரும் எனது குழந்தையும் விலக்கிவிட்டதாகவும், என் மைத்துனரை பார்த்து எதிரி கையில் கம்பியை வைத்துக் கொண்டு உன் அக்காவை கொல்லாமல் விட மாட்டேன் என்று மிரட்டியதாகவும் நான் இரவு 7 மணியளவில் வீட்டிற்கு வந்த போது என் மனைவி என்னிடம் கூறினார். நான் என் மனைவியிடம் இந்த நேரத்தில் காவல் நிலையம் செல்ல வேண்டாம் என்று காலை சென்று புகார் கொடுக்கலாம் என்று கூறினேன். வழக்கு சம்பவம் சம்மந்தமாக என் மனைவி புகார் கொடுத்தார். எனது மனைவி கொடுத்த புகார் சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

என் மீது எதிரியின் மனைவி தற்கொலைக்கு தூண்டியதற்காகவும், எதிரியின் வீட்டிலிருந்த சிசிடிவி கேமரா உடைத்தற்காகவும் எதிரியின் கழுத்தில் கத்தியை வைத்து கொலைமுயற்சி செய்த குற்றத்திற்காகவும் மூன்று வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றால் பொய் வழக்குகள் நிலுவையில் உள்ளது. எனது மனைவி கொடுத்த புகார் சம்மந்தமாக வழக்கு சம்பவம் நடைபெறும்பொழுது நான் வீட்டில் இல்லை என்றாலும், எனது மனைவி சொல்லித்தான் வழக்கின் விவரங்களை தெரிந்து கொண்டேன் என்றாலும் சரிதான். எனது முதல்நிலை சாட்சியத்தில் 7 மணிக்கு தான் வழக்கு சம்பவம் குறித்து எனக்கு தெரியவந்தது என்று சொல்லியுள்ளேன் அதன்படி அருகிலுள்ள காவல் நிலையத்திற்கு உடனே சென்று புகார் கொடுக்காமல் தாமதமாக எதிரியின் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் எனது மனைவிக்கு உடல்நிலை சரியல்லை என்பதால் மெடிக்கலுக்கு அழைத்துச் சென்றேன் நேரமாகிவிட்டதால் மறுநாள் புகார் கொடுத்தேன். நான் மெடிக்கலுக்கு எனது மனைவியை அழைத்துச் சென்றேன் என்று சொல்வது பொய் என்றாலும், எதிரி என் மீது கொடுத்த மேற்கண்ட மூன்று வழக்குகளில் உள்ள முன் விரோதத்தின்

காரணமாகத் தான் எனது மனைவியை வைத்து எதிரியின் மீது பொய்யாக புகார் கொடுக்க செய்து அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.